முருகப்பெருமான் துணை

**மகான் புதபகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.04.2023**, வெள்ளிக்கிழமை

1. ஞான குருவே அரங்கா போற்றி
ஞானிகளை படைக்க வேண்டி
ஞான சேவை ஆற்றும் வள்ளலே
ஞான தேசிகனே போற்றி போற்றி
2. போற்றியே சோபகிருது தகர்திங்கள்
புகலுவேன் அட்டம திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 08 ம் நாள், 21.04.2023 வெள்ளிக்கிழமை)
ஆற்றல்பட அனுகூல ஆசிதனை
அரங்கனுக்கு புதபகவான் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் தரும
ஞான வழிகள்தான் கலியினில்
நம்பிக்கை தந்து மீட்கும் மார்க்கம்
4. மார்க்கமாம் அகத்தியர் சன்மார்க்க
மகத்துவம் அறிந்து சேர
பார்த்துரைக்க பிரணவக்குடிலில்
பங்களிப்பை தருமவழிச் செய்து
5. செய்துமே அரங்கன் திருவடியாம்
சித்திமிகு ஞானத்திருவடியை
அய்யங்கொள்ளா வணங்கி வர
ஆபத்து இடைகண்டமில்லா
6. கண்டமில்லா ஆயுள் கூடி
கவலையில்லா வாழ்வுமாகி
தொண்டுவழிப் பயணமாகி
தொடர்ந்து அரங்கன் நிழலில் வாழ
7. வாழவே வறுமை கட்டமிலா
வஞ்சம் சூழ்ச்சி பகைமையில்லா
காலனையே வெல்லும் சக்தி
கந்த வேலனின் வரமாகக் கிட்டி

8. கிட்டியே மக்களிடை மாற்றம்
குருவருள் சித்தியாகத் தேறி
கட்டமான வழிகளை நீக்கி
கண்ணியமான சேவைகளை செய்து
9. செய்துமே உலகையே மாற்றும்
சித்திமிகு சக்திகள் ஆகவும்
மெய் ஞானவான்கள் ஆகவும்
மேலவர்கள் வரவேற்று அருளும்
10. அருளும் வாய்ப்பும் ஆசியும்
அரங்க ஞானி தேர்வுவழிகிட்டி
வருங்காலம் அரங்கன் தலைமை
வையகம் ஏற்றிடும் வண்ணம்
11. வண்ணமுடன் ஞான சேவையில்
வளரும் மலரும் சகலதுமாக
சண்முகனார் வெளிப்பாடாக உலகில்
சகலதுமாக அரங்கனால் நிகழும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—